

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 149 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 23 – திங்கள்கிழமை 08 ஜனவரி 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 149 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 23 - Monday 08 January 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்பில் ‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு’ தொடங்கியது !

# ‘தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு பெரும் பாய்ச்சல்!’

## முதலீடுகள் குவிவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு !

**சென்னை, ஜன. 8-**

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் தொடங்குவதையொட்டி உலகளாவிய பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் செய்வதில் ஆர்வம் காட்டியுள்ளது. ஏறத்தாழ 5.5 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாட்டிற்கு முதலீடுகள் வர வாய்ப்புகள் உள்ளன.**

**இந்நிலையில், உலகின் முன்னணி மின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான ‘வின் பாஸ்ட்’ நிறுவனம் ரூபாய் 16,000 கோடி முதலீட்டை மேற்கொள்ளவுள்ளது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிடும்போது, இதுவெறும் முதலீடல்ல; தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு பெரும் பாய்ச்சல் என்று பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.**

சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது. தமிழ்நாட்டிற்கு ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்க்க வழிவகுக்கவுள்ள உலகமுதலீட்டாளர்கள்மாநாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்றும் நாளையும், உலக முதலீட்டாளர் மாநாடு நடைபெறுகிறது. இம்மாநாட்டில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டிற்கு ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கான முதலீடுகளை ஈர்க்க வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடங்கியது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து தொடக்க உரையாற்றினார்.

ஒன்றிய தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றினார்.

தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா வரவேற்புரை ஆற்றினார்.

இந்த மாநாட்டில் தொழில்கள் அடிப்படையிலான பல்வேறு தனித்தனி அமர்வுகள் நடத்தப்படுகின்றன. ஜவுளி, காலணி தொழில்கள், மின்சார வாகனங்கள், வேளாண் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு அமர்வுகள் 2 நாட்களும் நடத்தப்படுகின்றன.

இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளின் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்



களில் கையெழுத்திட உள்ளன. சில புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னிலையில், தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி மையம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து இன்று மாலை உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஆற்றுகிறார்.

இதனிடையே முதலமைச்சர் அவர்கள் விடுத்த சமூக வலைதள பதிவில், “தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடு, பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது” என்று குறிப்பிட்டுள்ளார்.

“30,000க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன், எங்கள் பிரச்சாரங்கள், Titans of TamilNadu மற்றும் ஒரு டிரில்லியன் பரிவர்த்தனை கனவு ஆகியவை பரவலான உற்சாகத்தைத் தூண்டியுள்ளன” என்றும் தெரிவித்துள்ளார்.

**தமிழ்நாட்டின் தொழில் வளத்தை இம்மாநாடு பறைசாற்றும்!**

“உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 450க்கும் மேற்பட்ட பன்னாட்டுப் பிரதிநிதிகள், 170 உலகப் புகழ் பெற்ற பேச்சாளர்கள் மற்றும் 50 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதுடன், தமிழ்நாட்டின் தொழில்வளத்தை இம்மாநாடு பறைசாற்றும்” என்றும் தெரிவித்துள்ளார். 26 சிந்தனை தலைமை அமர்வுகளை வரிசைப்படுத்தியுள்ளோம். குறு, சிறு தொழில்துறைக்கான அரங்குகள், தமிழ்நாடு சுற்றுச்சூழல் அமைப்பு அரங்கு, பன்னாட்டு அரங்குகள் மற்றும் ஸ்டார்ட்அப் தமிழ்நாடு அரங்கு ஆகியவை உள்ளன. பிரதிநிதிகள், மாநிலத்தின் தொழில்துறை அதிசயத்தைக் காணவும் வணிக ஒத்துழைப்புகளை வளர்க்கவும் ஒரு அருமையான வாய்ப்பை வழங்குகிறது” என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டின் தொழில்துறை மரபைக் கொண்டாடுவதிலும், நமது மாநிலம் வழங்கும் அபரிமிதமான ஆற்றலைப் பயன்படுத்துவதிலும் எங்களுடன் சேருங்கள் என்று தொழில்துறையினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை சுமார் 250 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 3 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 4 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது.

**தமிழ்நாட்டை தொழில் மையமாக்க உந்துவிசையாகச் செயல்பட்டு வருகிறது!**

தி.மு.க. ஆட்சி அமையும்போதெல்லாம், தமிழ்நாட்டை தொழில் மையமாக்க உந்து விசையாகச் செயல்பட்டு வருகிறது. தொடக்கத்தில் தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் தொழிற்பேட்டைகள் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டன. 1996ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்த ஆட்சியில், வாகனத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு வரத்தொடங்கின.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

### எழுத்தாற்றலாலும் படைப்பாற்றலாலும் ரசிகர்களின் உள்ளங்களில் குடியேறியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

# ரூ.500 கோடியில் பூந்தமல்லியில் நவீன திரைப்பட நகரம்!

## கலைஞர் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற ‘கலைஞர் – கலைஞர் 100’ திரைத் துறையின் கலை விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, ஜன.8 -**

**தமது எழுத்தாற்றலாலும் பண்முகப்பட்ட படைப்பாற்றலாலும் ரசிகர்களின் உள்ளங்களில் குடியேறியவர் நம் தலைவர் கலைஞர் என்றும் பூந்தமல்லியில் ரூ.500 கோடியில் நவீன திரைப்பட நகரம் உருவாக்கப்படும் என்றும் நேற்று முன்தினம், கலைஞர் நூற்றாண்டையொட்டி, ‘கலைஞர் - கலைஞர் 100’ திரைத்துறையின் கலை விழாவில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.01.2024) சென்னை, கிண்டி, மெட்ராஸ் ரேஸ் மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற “கலைஞர் – கலைஞர் 100” திரைத்துறையின் மாபெரும் கலை விழாவில் ஆற்றிய உரை வருமாறு : -

நிகழ்ச்சியினை தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் சங்கம், தென்னிந்திய நடிகர் சங்கம், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனம், தமிழ்நாடு திரைப்பட நடப்பு விநியோகஸ்தர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட திரையரங்க உரிமையாளர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட Multiplex Association, இந்த சங்கங்கள் ஒன்று சேர்ந்து, இந்த இனிய நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு, நாமெல்லாம் பெருமைப் படத்தக்க வகையில் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியிருக்கக்கூடிய பெருமதிப்பிற்குரிய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களே, என்னுடைய அன்பிற்கினிய கலைஞானி கமல்ஹாசன் உள்ளிட்ட திரையுலகத்தின் உடன்பிறப்புக்களே, பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நான் உரையாற்ற வரவில்லை. நன்றி கூற வந்திருக்கிறேன். அது தான் முறையாக இருக்கும்.

அப்பா, அம்மா வைத்த பெயரை கூட அழைக்காமல், ‘கலைஞர்’ என்று தமிழ்நாட்டு மக்கள் அன்போடு அழைத்த ஒரு மாபெரும் தலைவர் நம்முடைய கலைஞர்.

**பட்டத்துக்கு முழுப் பொருத்தமானவர்!**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நம்முடைய உள்ளங்களில் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். தொண்டர்கள் கொடுத்த ‘தலைவர் ‘பட்டத்தை போலவே, நீங்கள் கொடுத்த ‘கலைஞர்‘ பட்டத்துக்கும் முழுப் பொருத்தமானவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! தலைவர் கலைஞர் என்று தான் தமிழ்நாடே அவரை அழைக்கிறது.

சூப்பர் ஸ்டார் முதல், தென்னிந்திய கலைஞர்கள் வரை இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

**ஒரு அரசியல் இயக்கத்தின் தலைவராக, 50 ஆண்டுகள்! 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர்! எந்த பொறுப்பை வகித்தாலும், தன்னுடைய படைப்புத் திறனை வெளிப்படுத்துவதில் அவர் குறைவைத்ததே கிடையாது. தன்னுடைய எழுத்தாற்றலாலும், பன்முகப்பட்ட படைப்பாற்றலாலும், ரசிகர்களின் உள்ளங்களில் குடியேறியவர் நம்முடைய தலைவர் கலைஞர்!**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.1.2024) சென்னை, கிண்டி, மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற “கலைஞர் கலைஞர் 100 திரைத்துறையின் மாபெரும் கலை விழாவில் கலந்து கொண்டு, “நூற்றாண்டு கலை மலரை வெளியிட்டார். இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமல்ஹாசன், முன்னணி நடிகர்கள், நடிகர் சிவ ராஜ்குமார், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர் பூச்சி முருகன், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் முரளி ராமநாராயணன், செயலாளர்கள் ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் எஸ்.கதிரேசன், திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகள், திரைத்துறையின் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள், திரைப்படத் துறையின் தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.